# தாய்மொழி தமிழ்

## தரம் - 03

### முதலாம் தவணை

2022ஆம் ஆண்டில் இழந்த காலத்தை மீளமைக்கும் வேலைத்திட்டம்

**Recovery Plane for Learning Loss – 2022**

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்வியில் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும்

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றைத் தவிர்த்து அவசியமான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இலகுவான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு. மாற்றங்களைச் செய்ய வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியாவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அத் தவணைக்குரிய பாடப்பரப்பில் உள்ள அத்தியாவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுபடுத்தப்பட்டு பின்னர் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுபடுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர்ப்படும் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்.

தரம் 3 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.**<br><br>**பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.**<br><br>**வாசித்தல் திறனைச் செவிமடுப்பதற்காக வாசிப்பார்.**<br><br>**எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.** | ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள் எதிர்ப்பாற் சொற்கள் ஆகியவற்றை இனங்கண்டு கொள்வார். அவற்றை உரிய வகையில் பயன்படுத்துவார்.<br><br>அடைமொழிகளை அறிந்து அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களிற் பயன்படுத்துவார். | ஒத்தகருத்துச் சொற்கள்<br><br>எதிர்க்கருத்துச் சொற்கள்<br><br>எதிர்ப்பாற் சொற்கள் (ஆண்பால், பெண்பால்)<br><br>அடைமொழிகள் | செயற்பாடுகள்- 1,2<br><br>செயற்பாடுகள் - 3,4,5,<br><br>செயற்பாடுகள் - 6,7,8<br><br>செயற்பாடுகள் - 9, | 19 - 21<br><br>21 - 23<br><br>23 - 25<br><br>25 - 26 | 2 மணி<br><br>2 மணி<br><br>2 மணி<br><br>2 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | காலங்களை (இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்) அறிந்து அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களிற் பயன்படுத்துவார். | வாக்கியங்கள் (காலங்கள்) | செயற்பாடுகள்-10,11 | 26 - 29 | 4 மணி |
| | | வாக்கியங்களில் நிறுத்தக்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) இடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பொருத்தமுறப் பயன்படுத்துவார். | நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) | செயற்பாடுகள் - 12 | 30 - 32 | 3 மணி |

தரம் 3 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.**<br><br>**விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்.** | பாடல்கள் கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துப் புரிந்து கொள்வார்.<br>பாடலின் கருத்தினை அறிந்து கொளள் முனைவார்.<br><br>சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்கள் மாணவரைக் கவர்ந்த சிறிய உரையாடல் வரிகள் ஆகியவற்றைப் பிழையின்றி எழுதுவார். | சிறுவர் பாடல்கள்<br><br>சிறுவர் கதைகள் | செயற்பாடுகள் - 1,2,3,4<br><br>செயற்பாடுகள் - 5<br><br>செயற்பாடுகள் - 7 | 43 -47<br><br>48 – 50<br><br>51 - 52 | 3 மணி<br><br>1 முணி<br><br>1 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | விரல் பொம்மை உரையாடலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சொற்களை விருப்பு டனும் இரசனையுடனும் எழுதுவார். | விரல் பொம்மை உரையாடல்கள் | செயற்பாடுகள் -8 | 51-52 | 1 மணி |
| | | போலச் செய்தலின் போது தெரிவு செய்த கதாபாத்திரங்களின் பெயர்களை நினைவுபடுத்திப் பிழையின்றி எழுதி வாசிப்பார். | போலச் செய்தல் | செயற்பாடுகள் - 9 | 52 - 54 | 2 மணி |
| பொருத்தமான நபிநயங்களைப் பயன்படுத்தி பாத்திரமேற்று நடித்தலில் ஈடுபடுவார். | | | | | | |

தரம் 3 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ. கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.** | நூலகத்துடன் தொடர்புடைய சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளங்கி அவற்றுக்கேற்ப துலங்குவார். | நூலகத்துடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள் | செயற்பாடுகள் - 1 | 55 - 56 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்** | | - அறிவுறுத்தல்கள் | செயற்பாடுகள் - 2,3 | 56 - 57 | 1 மணி |
| | | நூலகத்துடன் தொடர்புடைய கட்டளைகளைச் செவிமடுதது் அதறகேறபத் துலங்குவார். | - கட்டளைகள் | செயற்பாடுகள் - 4 | 58 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் வாசிப்பார்** | நூலகத்துடன் தொடர்புடைய தகவல்களை அறிந்து கொள்வார். தகவல்களைத் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார். | - தகவல் பரிமாற்றம் | செயற்பாடுகள் - 5 | 59 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் எழுதுவார்** | பாடசாலை நூலக அங்கத்துவப் படிவத்தை வாசித்துப் பிழையின்றிச் சுருக்கமாகப் பூர்த்தி செய்ய முன்வருவார். | - சுயவிபரம் | செயற்பாடுகள் - 6 | 59 | 1 மணி |

தரம் 3 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.** | மரபுச் சொற்களை அறிந்து உரியமுறையில் பிரயோகிப்பார். | இளமைப் பெயர்கள் (மரபுச் சொற்கள்) | செயற்பாடுகள் - 3,4 | 63 -64 | 2 மணி |
| | **சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.** | விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைபப் தோடு ஆர்வத்துடன் விடுவிப்பார். | விடுகதைகள் | செயற்பாடுகள் - 5:6 | 64-65 | 2 மணி |
| | **சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.** | பழமொழிகளை பிழையின்றி வாசித்து எழுதவார். | பழமொழிகள் | செயற்பாடுகள் - 7 | 66 -67 | 2 மணி |
| | **சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.** | குறியீடுகளை இனங்காண்பதோடு விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | குறியீடுகள் | செயற்பாடுகள் - 8 | 67-68 | 1 மணி |

(தாய்மொழி : 35 மணித்தியாலங்கள